# தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6

**ந.க.எண். 040626/கே/இ3/2025 நாள். 30.07. 2025**

**பொருள்:** பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்தும் LEVEL UP திட்டத்தின் கீழ் மாதவாரியான மொழித்திறன் இலக்குகள் – ஆகஸ்ட் மாதத்திற்கான திறன் வளர் செயல்பாடுகள் அட்டவணை வெளியிடுதல் – தொடர்பாக

**பார்வை:** சென்னை –06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 040626/கே/இ3/2025 நாள். 02/07/2025.

*******

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அரசுப் பள்ளிகளில் பயிலும் குறிப்பாக ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களின், கேட்டல், வாசித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்துவதற்கான LEVEL UP என்ற தன்னார்வத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்களின் அடிப்படை மொழித்திறன் அடைவிற்கான மாதவாரியான இலக்குகள் வெளிடப்பட்டு அதற்கான செயல்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜூன் மற்றும் ஜூலை மாதத்திற்கான மொழித்திறன் இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் கொண்ட அட்டவணை வெளியிடப்பட்டு பள்ளிகளில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் சார்ந்த செயல்பாடுகள் வகுப்பறைகளில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களின் அடிப்படை மொழித்திறன்களில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்படுவதாக மாநிலம் முழுவதிலிருந்தும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து நேர்மறையான கருத்துகள் தொடர்ந்து கிடைத்து வருவது பாராட்டுக்குரியது. மாதந்தோறும் வெளியிடப்படும் மொழித்திறன் இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் மாணவர்களுக்கு எளிதில் கற்றுத் திறனடைய உதவுவதோடு, அவர்களது தினசரி கற்றல் முன்னேற்றத்தை மேம்படுத்த ஊக்குவிக்கின்றன.

மாதம் முழுவதற்குமான Level Up அட்டவணை செயல்பாடுகள் மாணவர்களை ஆங்கிலம் மொழி கற்றல் மீதான தயக்கம் தவிர்த்து நேரடி செயல்பாட்டுக் கற்றலை நோக்கி ஈர்ப்பதை, கடந்த இரு மாதங்களின் செயல்பாடுகளில் மாணவர் பங்கேற்பு அதிகரித்து உள்ளதில் இருந்து அறிய

முடிகிறது. குழுச் செயல்பாடுகள் மாணவர்தம் இணைச் செயல்திறன் வளர்ச்சிக்கு துணை புரிகிறது. இவ்வாறான மாதாந்திர இலக்குகள் மற்றும் செயல்பாடுகள், ஆசிரியர்களுக்கு அனைத்து மாணவர்களின் அடிப்படை மொழித்திறன்கள் அடைவிற்கான திட்டமிடப்பட்ட வழிகாட்டுதல்களை வழங்குகிறது. Level Up மாதாந்திர இலக்குகள் அட்டவணை வழியாக சுட்டப்படும் கற்பித்தல் வளங்கள் மற்றும் செயல்பாடுகள் மாணவர்களின் கற்றல் அடைவுகளை தொடர்ந்து கண்காணித்து அவர்களது திறன் அடைவு முன்னேற்றத்தினை பதிவு செய்ய ஆசிரியர்களுக்கு பெரிதும் உதவி வருவது கவனப்படுத்தப்படுகிறது.

2025-26 ஆம் கல்வியாண்டில், அரசுப்பள்ளி மாணவர்கள் ஜூன்2025 முதல் டிசம்பர் 2025 வரையுள்ள ஏழு மாதங்களில் ஆங்கில மொழியின் நான்கு அடிப்படைத் திறன்களை எளிதாக அடையும் வகையில் பல்பேறு செயல்பாடுகள் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் அதன் மூன்றாம் அல்லது நான்காம் வாரத்தில் அடுத்து வரும் மாதத்திற்கான மொழித்திறன் இலக்குகள் கொண்ட அட்டவணை வெளியிடப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2025 ஆகஸ்ட் மாதத்தின் நான்கு வாரங்களுக்கான அடிப்படை ஆங்கில மொழித் திறன்வளர் இலக்குகள் மற்றும் கற்றல் செயல்பாடுகள் தற்போது வெளியிடப்படுகிறது.

ஆகஸ்ட் மாத அட்டவணையில் கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இணைந்து சொற்களஞ்சியம், இலக்கணப் பயிற்சிகள் மற்றும் படைப்பாற்றல் சார்ந்த எழுதுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் பாடப்பொருளுடன் தொடர்புடைய அடிப்படை இலக்கணப் பகுதிகளையும், புதிய சொற்களையும், படைப்பாற்றல் எழுதுதல் உள்ளிட்ட திறன்களை கற்றுக்கொள்ள ஏதுவாக செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் மொழிவளர் திறன் அட்டவணை செயல்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அதன் இலக்குகள் அடையப் படுவதை உறுதி செய்வதோடு, முழுமையான அடிப்படை மொழித்திறன் அடைவிற்காக குறிப்பாக ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்கள் மேற்கொள்ளக் கூடிய மற்ற கற்றல் செயற்பாடுகளுடன் இணைந்து, இச்செயல்பாடுகளை ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மேற்கொள்வதை ஊக்குவித்து, அனைத்து மாணவர்களும் அடிப்படை மொழித் திறன்களை பெற உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், பள்ளித் தலைமையாசிரியர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இத்திட்டத்திற்கான ஆசிரியர் வழிகாட்டுதல்கள், கற்பித்தல் வளங்கள் மற்றும் மாதாந்திர இலக்குகள் https://sites.google.com/view/tnlevelup என்ற வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் பெற்ற அடிப்படை ஆங்கில மொழித் திறன் அடைவு குறித்து உரிய கால இடைவெளிகளில் பள்ளிக் கல்வித் துறையால் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு:**
ஆகஸ்ட் மாதத்திற்கான செயல்பாடுகள் அட்டவணை

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

**பெறுதல்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல் : அரசு முதன்மை செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9
அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.